விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: நான்கு

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2038 மாசி 05 சனிக்கிழமை (17.02.2007) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 60

ராம்கோ RAMCO MADRAS CEMENTS LTD RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.
ராம்கோ சீமெந்து

## முன்னாள் அமைச்சர்களின் கருத்து நாட்டைக் காட்டிக்கொடுக்கும் செயல்



### அமைச்சர் ஹெகலிய சாடல்

(கொழும்பு)

முன்னாள் அமைச்சர்களான மங்கள சமரவீர மற்றும் சிறிபதி சூரியாராட்சி ஆகியோர் தெரிவித்த கருத்துக்கள் நாட்டைக் காட்டிக் கொடுக்கும் செயலெனஅமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.தேசிய ரீதியாகவும் போரியல் ரீதியாகவும் தமிழீழ விடுதலைப்புலிகள் பின்னடைவைச் சந்தித்துள்ளனர்.

இந்நிலையில் முன்னாள் அமைச்சர்களின் கருத்துக்கள் நாட்டைக்காட்டிக்கொடுக்கும் செயலென அவர் கூறினார். கிழக்கில் புற்றரைகளின் மீது தாக்குதல் நடத்தாமல் (04 ஆம் பக்கம் பார்க்க)

## செய்தியாளரைக் காணவில்லை என மனித உரிமை ஆணைக்குழுவில் முறையீடு

(யாழ்ப்பாணம்)

வலம்புரிப் பத்திரிகையின் துன்னாலைச் செய்தியாளர் சுப்பிரமணியம் இராமச்சந்திரனை (வயது-37) காணவில்லை என அவரது தந்தையாரால் யாழ்.மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கரவெட்டியில் தனியார் கல்வி நிறுவனம் ஒன்றை நடாத்தி வரும் அவர் நேற்றுக் காலை வரைவீடு திரும்பாத நிலையில் இம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை நேற்று முன்தினம் மாலை தனது கல்வி நிறுவனத்திலிருந்து சைக்கிளில் வீடு திரும்பிக் கொண்டிருந்த போதே அவர்காணாமல் போயுள்ளதாக அவரது தந்தை தெரிவித்துள்ளார்.அவர் காணாமல் போனமை குறித்து நெல்லியடிப் பொலிஸ் நிலையத்திலும் முறையிடப்பட்டுள்ளது. (ஏ)

# நாட்டுக்கு மிக முக்கியமான தீர்மானம்

# பிக்குகள் முன்னணி இன்று அறிவிக்கும்

## அதன் தலைவர் தெரிவிப்பு

(கொழும்பு)

**நாட்டின் நன்மை கருதி மிகவும் முக்கியமான தீர்மானமொன்றை இன்று அறிவிக்கப் போவதாக தேசிய பிக்குகள் முன்னணி தெரிவித்துள்ளது. நேற்று கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அதன் தலைவர் தம்ரப அமில தேரர் தெரிவித்துள்ளார்.**

போர்நிறுத்த உடன்படிக்கையை அரசாங்கம் கிழித்தெறிய வேண்டுமென கொழும்பு விகாரமாதேவிப் பூங்காவில் தொடர்ச்சியான சுழற்சி முறையான உண்ணாவிரதப் போராட்டமொன்றை நடத்திவரும் தேசிய பிக்குகள் முன்னணி இன்று தலதா மாளிகையில் விசேட பூஜையொன்றை நடத்தவுள்ளது.

விசேட பூஜையின் பின்னர் நாட்டுக்கு முக்கியமானதும் கடுமையானதுமான தீர்மானமொன்றை அறிவிக்க இருப்பதாகவும் இந்தத் தீர்மானமானது இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாக தாம் எடுத்த முடிபாக அமையுமெனவும் தேசிய (04 ஆம் பக்கம் பார்க்க)

## பிரித்தானிய வெளியுறவு அமைச்சர் கூட்டமைப்பினரை சந்திக்கவில்லை

(கொழும்பு)

இருநாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டு கொழும்புக்கு வந்துள்ள பிரித்தானியா வின் வெளியுறவு மற்றும் பொதுநலவாய நாடுகளுக்கான அமைச்சர் கிம் ஹெவல்ஸ் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு எம்.பிக்களை சந்திக்கவில்லை.

அமைச்சரை சந்திப்பதற்கு நேரம் ஒது க்கி தருமாறு கூட்டமைப்பினர் கொழும்பிலுள்ள பிரித்தானிய தூதரக அதிகாரிகளிடம் வேண்டுகோள் விடுத்திருந்தனர். இருந்த போதிலும் அமைச்சர் கிம் ஹெவல் ஸுக்கு நேரமில்லாமையினால் சந்திக்க முடியாதென அதிகாரிகள் கூட்டமைப்பிடம் தெரிவித்திருக்கின்றனர்.

அமைச்சர் கிம் ஹெவல்ஸ் ஜனாதி பதி, எதிர்க்கட்சி தலைவர் மற்றும் ஐரோப் பிய ஒன்றிய பிரதிநிதிகள், கொழும்பி லுள்ள வெளிநாட்டு இராஜதந்திரிகள் ஆகியோரை மாத்திரமே சந்தித்து கலந் துரையாடியுள்ளார்.

அதேவேளை (04 ஆம் பக்கம் பார்க்க)

## சிலாபத்துறைக் கடற்பரப்பில் இரு படகுகள் தாக்கி மூழ்கடிப்பு

### புலிகளினது என்கிறது கடற்படை

(கொழும்பு)

கற்பிட்டி சிலாபத்துறைக் கடற்பரப்பில் விடுதலைப்புலிகளின் இரண்டுபடகுகளைத் தாம் தாக்கியழித்துள்ளதாக கடற்படை தெரிவித்துள்ளது.

அழிக்கப்பட்ட அப் படகுகளிலிருந்து கிளைமோர்க் கண்ணி வெடிகளைத்தயாரிப்பதற்குப் பயன்படுத்தும் 10 லட்சத்திற்கு அதிகமான உருக்கு வாள் வயரிங் சன்னங்களை மீட்டதாகவும் கடற்படை தெரிவித்துள்ளது.

இந்தியாவிலிருந்து இலங்கையை நோக்கி வந்துகொண்டிருந்த இரு படகுகளை நேற்றுக்காலை 9.30 மணியளவில் தாம் தாக்கியழித்ததாக கடற்படையின் பேச்சாளர் கொமடூர் பி.ஜே.பி.தஸநாய்க்க தெரிவித்துள்ளார்.

ரோந்து நடவடிக்கையில் கடற்படையின் படகுகள் ஈடுபட்டிருந்த சமயம் சந்தேகத்திற்கிடமான இரண்டு படகுகளை சிலாபத்துறை கடற்பரப்பில் கண்டனர்.

உடனடியாக இரு படகுகளையும் நிறுத்துமாறு கடற்படையினர் அறிவித்த போதும் இரு படகுகளும் தப்பிச் செல்ல முற்பட்டன. இதனையடுத்து கடற்படையினர் எச்சரிக்கை வேட்டுக்களைத் தீர்த்த போது அப்படகுகளிலிருந்தவர்கள் தமது படகுகள் மீது தாக்குதல் நடத்தியதாக (04 ஆம் பக்கம் பார்க்க)

## பளையில் விமான குண்டுத் தாக்குதல்

பளைப் பகுதியில் கிபீர் மற்றும் மிக் ரக விமானங்கள் நேற்றுக் குண்டுவீச்சுத் தாக்குதலை நடத்தியுள்ளன.பளை மற்றும் சோரன் பற்றுப் பகுதிகளில் நேற்றுக் காலை 9.40 மணியளவில் குண்டு வீச்சுத் தாக்குதலை நடத்தியதாக தெரிவிக் கப்பட்டுள்ளது.

இத் தாக்குதல் இடம்பெற்றவேளை முகமாலைப் பின் தளத்திலிருந்து படையினர் செறிவான எறிகணைத் தாக்குதலை நேற்று அதிகாலை முதல் பிற்பகல் ஒரு மணிவரை நடத்தினர்.

ஆட்லறி, மோட்டார் எறிகணைத் தாக்குதல்களும் மற்றும் பல்குழல் ரொக்கெட் தாக்குதல்களும் படையினரால் நடத்தப்பட்டதாகச் செய்திகள் தெரிவித்தன. (ச-5)

## மங்களவுடன் தொடர்பு கொள்ள ஜெயரட்ணவுக்கு மகிந்த உத்தரவு

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் பதவி நீக்கம் செய்யப்பட்ட அமைச்சர்களினால் சுதந்திரக் கட்சிக்குள் தோன்றியுள்ள பிளவுகளைத் தணிப்பதற்கு திரைமறைவில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

முன்னாள் அமைச்சர்களான மங்கள சமரவீர மற்றும் சிறிபதி சூரியாராட்சி ஆகியோரிடம் பேசுமாறு சுதந்திரக் கட்சியின் மூத்த உறுப்பினரும் அமைச்சருமான டி.என்.ஜெயரட்ணவை, மகிந்த ராஜபக்ஷ கேட்டுள்ளதாகக் கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

இது தொடர்பாக சுதந்திரக் கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளரான டி.எம்.ஜெயரட்ண கருத்துத் தெரிவிக்கையில்,

அநுராவுடனான பிரச்சினைகள் முடிபுக்கு வந்துள்ளன.அவர் தற்போது அமைச்சரவையில் இணைந்துள்ளார். எனவே தற்போது மங்கள சமரவீர மற்றும் சிறிபதி சூரியாராட்சி ஆகியோருடன் (04 ஆம் பக்கம் பார்க்க)

## மனித உரிமைப் பேச்சாளராக செல்வி புலிகளால் நியமனம்

(கிளிநொச்சி)



மனித உரிமை மற்றும் மனிதாபிமான விவகாரங்களுக்கான துறையின் பேச்சாளராக செல்வி நியமிக்கப்படுவதாக தமிழீழ விடுதலைப்புலிகளால் நேற்று கிளிநொச்சியில் அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழீழ சமாதான செயலகத்தின் நிர்வாகிகளில் ஒருவரான என்.செல்வி பணியாற்றியதுடன் தமிழீழ விடுதலைப்புலிகளின் சமாதான பேச்சுவார்த்தைக் குழுவில் இடம்பெற்றிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இவரது நியமனம் தொடர்பாக சமாதானச் செயலகப் பணிப்பாளர் சீ.புலித்தேவன் கருத்துத் தெரிவிக்கையில்,

'சிறிலங்கா படைத்துறையின் (04ஆம் பக்கம் பார்க்க)

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

## பொதுக்கூட்டம்

சரவணை பள்ளம்புலம் அருள்மிகு முருகமூர்த்தி திருக்கோவில் அறங்காவற் சபையின் வருடாந்த பொதுக்கூட்டம்நாளை காலை 11 மணிக்கு ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ச)

## ஜன்மதினம்

பருத்தித்துறை ஸ்ரீஇராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தில் நாளை மறுதினம் பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ணரின் 172வது ஜன்ம தினம் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

அன்றைய தினம் சேவாச்சிரமத்தில் ஸ்ரீ இராமகிருஷ்ணரின் வாழ்க்கையைச் சித்திரிக்கும் அழகிய படக்கண்காட்சியும் இடம் பெறுமென சுவாமி சித்ரூபானந்தா அறிவித்துள்ளார். (ச-52)

# சிறுவர் தேசிய செயற்றிட்டத்திற்கு 200 மில்லியன் ரூபா ஒதுக்கீடு

(கொழும்பு)

சிறுவர்கள் தொடர்பாக தேசிய செயற்றிட்டமொன்றை அமுல்படுத்துவதற்கு அரசாங்கம் 200 மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளது. இத்திட்டம் இம்மாத இறுதிக்குள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக சிறுவர் நன்னடத்தை மற்றும் சிறுவர் நலன்காப்பு சேவைகள் திணைக்கள ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

இத்தேசிய செயற்றிட்டம் மாகாணங்களிலுள்ள இத்திணைக்களத்துடன் இணைந்து மேற்கொள்ளப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பான அறிவுறுத்தல்கள் சகல மாகாண திணைக்களங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் இத்திட்டம் தொடர்பான கருத்துக்கள் அத்திணைக்களங்களிடமிருந்து கோரப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இத் தேசிய செயற்றிட்டம் மூன்று பிரதான நோக்கங்களை மையப்படுத்தி நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. சிறுவர் இல்லங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல், சிறுவர் துஷ்பிரயோகங்களைத் தடுத்தல் மற்றும் சிறுவர் நலன்களைக் கவனித்தல் என்பனவே அவையாகும் என அவர் மேலும் குறிப்பிட்டார். (எ-1)

## இலங்கை மீனவர்கள் இருவர் கைது

(சென்னை)

இந்திய கடல் எல்லையில் அத்துமீறி நுழைந்த இரு இலங்கை மீனவர்களை தங்கச்சிமடம் அருகே பொலிஸார் கைது செய்துள்ளனர்.நெடுந்தீவு 6வட்டாரத்திலிருந்து சென்ற கியூஸ்தாஸ் (வயது-20), அலன் மீன் (வயது - 20) ஆகிய இரு மீனவர்களுமே கைது செய்யப்பட்டுள்ளனர்.

அப்போது கடல் காற்றின் வேகத்தால் திசை மாறி இந்திய எல்லைப் பகுதியான இராமேஸ்வரம் அருகே தங்கச்சிமடம் சூசையப்பர் கோயில் கடற்கரைக்கு அவர்கள் வந்து சேர்ந்ததாக தமிழகச் செய்திகள் தெரிவித்தன. (ச)

# நியாய விலையில் பொருட்களை விற்குமாறு வர்த்தகர்களிடம் அரச அதிபர் வேண்டுகோள்

யாழ்.மாவட்டத்தில் பொருட்களை அதிக விலைக்கு விற்காது நியாய விலையில் விற்குமாறு யாழ்.அரச அதிபர் க.கணேஷ் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அதிக விலைக்கு பொருட்களை விற்பனை செய்யும் வியாபாரிகள் தமக்கு ஏற்படும் பாதிப்புக்களுக்கு அவர்களே பொறுப்பாளிகளாவர் எனவும் அரச அதிபர் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக யாழ். அரச அதிபர் நேற்று வெளியிட்ட செய்திக்குறிப்பில் வருமாறு,

யாழ்.மாவட்டத்தில் விலைகள் நிர்ணயம் செய்யப்படும் பொழுது இப்பொருட்கள் கொழும்பில் கொள்வனவு செய்யப்படும் விலை, கப்பல் போக்குவரத்து, ஏற்றியிறக்கல் கூலி, இலாப வீதம் என்பன கவனத்தில் எடுக்கப்பட்டுத் தீர்மானம் எடுக்கப்பட்டு அதன் விலைப் பட்டியல் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்டிருந்தன. இருப்பினும் இப் பொருட்கள் பல்வேறு இடங்களில், நிலையங்களில், நடைபாதைகளில் மூன்றரை மடங்குக்கு அதிகமாக விற்பனை செய்யப்படுவது அவதானிக்கப்பட்டுள்ளது.

ஆகவே இப்பொருட்களை விற்பனை செய்யும் அனைவரும் நியாயமான விலையில் பொருட்களை விற்பனை செய்ய வேண்டும் என மீண்டும் அறிவுறுத்திக் கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

அதிக விலையில் பொருட்களை விற்பனை செய்யும் பலர் விலை கூட்டி விற்பனை செய்வதற்கான பல்வேறு சாட்டுக்களைக் கூறுகின்றார்கள். காரணங்கள் எவை கூறப்படினும் எதிர்காலத்தில் பொருட்களை விற்பனை செய்யும் அனைவரும் பின்வரும் நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும் எனப் பணிக்கப்படுகின்றார்கள்.

★தமது வர்த்தக நிலையத்தில் விற்கப்படும் முக்கிய பாவனைப் பொருட்களின் விலைப் பட்டியல் பார்வைக்கு வைக்கப்பட வேண்டும்.

★ விற்பனைப் பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டமைக்கான ஆவணங்கள் உரிய அதிகாரிகளினால் கோரப்படும் பொழுது அவை சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

★ கொள்வனவுகளை வெவ்வேறு மறைமுக நடைமுறையில் மேற்கொள்வதனால் கூடுதலான விலையில் விற்பனை செய்யப்பட வேண்டியுள்ளது எனக் கூறப்படும் காரணம் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

★பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் கொள்வனவு செய்யப்படுவதற்குரிய பொருட்களைக் கொள்வனவு செய்வதற்கு பிரதேச செயலாளர்களால் அனுமதிக்கப்பட்ட வர்த்தகர்கள் மாத்திரம் வியாபார நோக்கத்திற்காக ப.நோ.கூ.சங்கங்களில் கொள்வனவு செய்யலாம். ஏனைய வியாபாரிகளுக்கு ப.நோ.கூ.சங்க இருப்பில் இருந்து வியாபார நோக்கங்களுக்கு விற்கப்படுவது முற்றுமுழுதாகத் தடை செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு நடைபெறுவது மாவட்டச் செயலகத்தின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

★அதிகாரம் வழங்கப்பட்ட உத்தியோகத்தர்கள் தமது பரிசோதனை நடவடிக்கைகளை பன்முகப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது.

வியாபாரத்திற்குரிய தர்மங்களையும் தார்மீகங்களையும் மீறுவது எங்களில் எவருக்குமே நீண்ட நன்மைகளைத் தரமாட்டாது.

மேற்கூறப்பட்ட பொருட்களை விற்பனை செய்யும் சகலரும் பாவனையாளர் பாதுகாப்புச் சட்ட ஏற்பாடுகளுக்கு அமையவே தமது வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்பதையும் மேலும் யாழ்.மாவட்டத்தில் மக்கள்படும் அவலங்கள், கஷ்டங்களை மேலும் அதிகரிக்காது தார்மீக ரீதியாக நீதியான, நியாயமான விலையில் பொருட்களை விற்பனை செய்ய வேண்டும் எனவும் கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

மேற்கூறப்பட்ட நடைமுறைகளைப் பின்பற்றத் தவறும் வியாபாரிகள் தமக்கு ஏற்படும் பாதிப்புக்களுக்கு அவர்களே பொறுப்பாளிகளாவர் என்பதையும் திட்டவட்டமாக அறியத் தருகின்றேன் என்றுள்ளது. (ச)

## 4 வர்த்தகர்கள் பிடிபட்டனர்

யாழ்.அரச அதிபரினால் அறிவிக்கப்பட்ட விற்பனை விலைகளுக்கு அதிகமான விலையில் பொருட்களை விற்பனை செய்த 4வர்த்தகர்களை நுகர்வோர் பாதுகாப்புச் சபை நேற்றுப் பிடித்துள்ளது. குறித்த வர்த்தகர்கள் நால்வருக்கும் எதிராக நுகர்வோர் பாதுகாப்புச் சபை யாழ்.நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (எ-1)

## உணவு விநியோகம் குறித்த அவசர கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் உணவு விநியோகம் தொடர்பான அவசர கலந்துரையாடல் ஒன்று யாழ்.மாவட்ட செயலகத்தில் இன்று காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது. இக் கலந்துரையாடலில் சகல பிரதேச செயலர்களையும் சகல பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்களினதும் தலைவர், பொது முகாமையாளர்களையும் தங்களது இருப்பு விபரங்களுடன் தவறாது கலந்து கொள்ளுமாறு அரசாங்க அதிபர் க.கணேஷ் அறிவித்துள்ளார். (ச)

## முல்லைத்தீவுக் கடலில் 2 மீனவர்களைக் காணவில்லை

முல்லைத்தீவு மாத்தளன் கடற்பரப்பில் மீன்பிடிக்கச் சென்ற இரு மீனவர்கள் காணாமல்போயுள்ளனர். நேற்று முன்தினம் அதிகாலை 2.30 மணிக்கு மீன்பிடிக்கச் சென்ற போது கடற்படையினர் பீரங்கித் தாக்குதலை நடத்தியுள்ளனர்.

இத் தாக்குதலையடுத்து இவர்கள் இருவரும் காணாமல் போயுள்ளதுடன் இவர்கள் சென்ற படகும் காணாமல் போயுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

ஏனைய தொழிலாளர்கள் இவர்களைத் தேடிச் சென்ற போது வலை மட்டும் கடலில் மீட்கப்பட்டதாகத் தெரியவருகின்றது. வத்தராயன் தெற்கிலிருந்து இடம்பெயர்ந்த கருணாகரன் ஜெகதீஸ்வரன் (வயது-22), மருதங்கேணியிலிருந்து இடம்பெயர்ந்த சிவானந்தம் சுரேஷ்(வயது-32) ஆகிய இரு மீனவர்களுமே காணாமல் போயுள்ளனர்.(எ-5)

## தரம் ஒன்றுக்கான ஆசிரிய வழிகாட்டியும் பாடத்திட்டமும் புத்தகமாக வெளியீடு

தரம் ஒன்று மாணவர்களுக்கு கற்பிப்பதற்கான ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியும் பாடத்திட்டமும் அச்சிடப்பட்டு புத்தகமாக வெளியிடப்பட்டுள்ளது.

இந்த வருடம் ஆரம்பநிலை ஒன்றில் உள்ளடங்கும் தரம் 1, தரம் 2 வகுப்புக்களுக்கான பாடத்திட்டமும் புதிதாக அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

புதிதாக அறிமுகம் செய்யப்பட்டுள்ள தரம் 1, தரம் 2 என்பனவற்றுக்குரிய ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியும் பாடத்திட்டமும் அச்சிட்டு புத்தகமாக வெளிவருவதற்கு முன் பயன்படுத்துவதற்கு வசதியாக தேசிய கல்வி நிறுவகத்தின் இணையத்தளத்தில் (www.nie.lk) வெளியிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தரம் 1 இற்குரிய ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியும் பாடத்திட்டமும் புத்தக வடிவில் வெளியாகி பாடசாலைகளுக்கு விநியோகிக்கப்பட்டு வருவதாகவும் சிங்கள, தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் சமகாலத்தில் வெளியாகி இருப்பதாகவும் தரம் 2 வகுப்பிற்குரிய ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியும் பாடத்திட்டமும் ஒரு சில தினங்களில் வெளிவரவுள்ளதாகவும் தேசிய கல்வி நிறுவக உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (எ-1)


## சிறு விளம்பரங்கள்

### வீடு வாடகைக்கு

பழைய பூங்கா வீதி, சுண்டுக்குளியில் 3 அறைகள், 2 ஹோல், சமையல் அறை, சாப்பாட்டு அறை, குளியல் அறை என்பவற்றுடன் அமைந்த வீடு உடன் வாடகைக்கு உண்டு. தொடர்பு:-021 222 3450, 021 222 5539. (623)

### மணப்பெண் தேவை

யாழ்.இந்து வேளாளர் 1970 உத்தராடம் மகர ராசி 49 கிரகபாவம் 5' 7" உயரம் G.C.E. A/L பயிற்றப்பட்ட வர்த்தக ஆசிரியர் மணமகனுக்கும் 1978 திருவாதிரை மிதுன ராசி 8 இல் செவ்வாய் 73 கிரகபாவம் G.C.E. A/L கணனி டிக்கிறி U.K. 5' 4" உயரம். அரச பணி புரியும் மணமகனுக்கும் அழகான, படித்த,பணியிலுள்ள மணப்பெண் தேவை. தொடர்புக்கு:-சிவாலயா சர்வதேச திருமண நிலையம், 389c, இராமலிங்கம் வீதி, திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம். T.P.021 222 6662, 077 5834982. (620)

### உங்கள் தேவைக்கு

ஒரே குடையில் KU பான்ட் C பான்ட் இணைக்க வேண்டுமா? டிஸ் அன்ரனா றிசிவர் பழுது பார்க்க வேண்டுமா? வீட்டு மின் இணைப்புக்கள் நேர்த்தியான முறையில் செய்து கொடுக்கப்படும். தொடர்பு:- போன் நம்பர்:-077 6232925.M.யூட் (622)


# ஊடகவியலாளரை விடுவிக்குமாறு பத்திரிகையாளர் சங்கம் வேண்டுகோள்

வட இலங்கை பத்திரிகையாளர் சங்க அங்கத்தவரும் வலம்புரி மற்றும் யாழ். தினக்குரல் நாளிதழ்களின் பிரதேச செய்தியாளருமாகிய சுப்பிரமணியம் இராமச்சந்திரன் வியாழன் மாலை கடத்தப்பட்டுள்ளமை எம்மை பெரும் அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது.

உண்மை, நடுநிலைமை மற்றும் பக்கச் சார்பின்மை எனும் உயரிய ஊடக கோட்பாட்டுடன் கால நேரம் பாராது அர்ப்பணிப்புடன் அவர் தமது பணியினை ஆற்றி வந்திருந்தார்.குடாநாட்டில் தொடரும் ஊடகங்கள் மற்றும் ஊடகவியலாளர்களின் மீதான நெருக்குவாரங்கள் மத்தியில் தற்போது இராமச்சந்திரனும் கடத்தப்பட்டுள்ளார்.

ஊடகப் பணியினில் அர்ப்பணிப்புடன் ஈடுபட்டு வந்த அவரை கடத்தியவர்கள் எவராக இருப்பினும் மனிதாபிமான அடிப்படையில் விடுவித்து உதவ வேண்டுமென நாம் வேண்டுகோள் விடுக்கின்றோம் என்றுள்ளது. (ச)

## மங்கள சமரவீரவின் பிரத்தியேக ஊழியர்கள் 58பேர் வேலை நீக்கம்

முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீரவுக்கு அரசாங்கத்தால் உத்தியோகபூர்வமாக வழங்கப்பட்ட 57 வாகனங்கள் மீளப் பெறப்பட்டுள்ளதோடு அவருடைய பிரத்தியேக ஊழியர்கள் 58 பேரும் வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளதாக ஜனாதிபதி செயலாளர் காரியாலயம் தெரிவித்துள்ளது.

இவ்வாறு வேலை நீக்கம் செய்யப்பட்ட 58 பேரும் இதுவரை துறைமுக அமைச்சின் கீழ் சம்பளம் பெற்றுக் கொண்டு மங்கள சமரவீரவின் பிரத்தியேக கடமைகளில் ஈடுபட்டிருந்த குழுவினர் என தகவல்கள் தெரிவிக்கின்றன.இது தொடர்பாக மங்கள சமர வீர தரப்பில் எந்தவித கருத்தும் இதுவரை தெரிவிக்க வில்லை என திவயின பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. (ச)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

அமரர்

### கந்தையா இராசலிங்கம்



தோற்றம் 20.12.1935 | மறைவு 18.01.2007

கடந்த 18.01.2007 வியாழக்கிழமை அன்று சிவபதமடைந்த எமது அன்புத் தெய்வத்தின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்ட அனைவருக்கும் தொலைபேசி மூலமும் கண்ணீர் அஞ்சலி மூலமும் ஆறுதல் தெரிவித்தவர்களுக்கும் மற்றும் சகல வழிகளிலும் உதவிய அனைத்து நல்லுள்ளங்களுக்கும் நன்றிகளைத் தெரிவிப்பதுடன் இன்று (17.02.2007) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

வட்டுவினி
இணுவில் மேற்கு

(C-618)

-குடும்பத்தினர்

காலத்தினால் செய்த நன்றி சிறிது எனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது

-திருக்குறள்

வலம்புரி

## துணைவேந்தரின் கோரிக்கைக்கு அனைவரும் ஆதரவு வழங்க வேண்டும்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கற்றல் செயற்பாடுகளை மீளவும் ஆரம்பிப்பதற்கு அனைத்துத் தரப்பினரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

இவ்வாறு யாழ்.பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் பேராசிரியர் இ.குமாரவடிவேல் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கடந்த ஐந்து மாதங்களாக இடைநிறுத்தப்பட்டுள்ள கற்றல் செயற்பாடுகளை மீளவும் எதிர்வரும் பத்தொன்பதாம் திகதி ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில் துணை வேந்தரின் கோரிக்கையை அனைத்துத் தரப்பினரும் ஏற்றுக் கொண்டு ஆதரவு வழங்குவது கட்டாயமானதாகும்.

யாழ்ப்பாணப் பல்கலைகழகத்தின் கற்றல் செயற்பாடுகள் தடைப்படுவதனால் ஏற்படுகின்ற ஒட்டுமொத்த பாதிப்பும் தமிழ் மக்களையே தாக்கும் என்பது தெரிந்த விடயம்.

இலங்கையில் இன விவகார வரலாற்றை ஒரு கணம் திரும்பிப் பார்ப்போமாயின், தமிழ் மாணவர்களின் கல்வியைப் பாதிக்க வைக்கும் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதைக் கண்டு கொள்ள முடியும்.

அதில் முக்கியமானதாக தரப்படுத்தலை கூறிக் கொள்ளலாம். திறமைக்கு இடமளிப்பதன் மூலம் தமிழ் மாணவர்கள் உயர் கல்வி மற்றும் பல்கலைக் கழகக் கல்வியைப் பெற்று விடுவார்கள் என்ற ஒரே காரணத்திற்காக 'தரப்படுத்தல்' முறைமை இலங்கை அரசினால் அறிமுகப்படுத்தப்பட்டது.

இதனால் எத்தனையே தமிழ் மாணவர்கள் உயர் கல்வியை - பட்டப்படிப்பை மேற்கொள்ள முடியாது போயிற்று.

இப்போது தரப்படுத்தலை மேவியதாக திறமை அடிப்படையிலான முறைமை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. தமிழர் தாயகத்தை யுத்த பூமியாக மாற்றி அதன் மூலம் தமிழ் மாணவர்க்ளின் கல்வியை வீழ்ச்சியடையச் செய்த பின்னர், திறமைக்கு இடம்கொடுத்த தந்திரம் திட்டமிடப்பட்டதும் தமிழ் மாணவர்களின் கல்வி வளத்தை சின்னாபின்னமாக்குவதுமான செயற்பாடாகும்.

எனவே பேரினவாத சிந்தனைக்குச் சாதகமான சூழ்நிலையை ஏற்படுத்துவதைத் தவிர்த்துத் தடைப்பட்டுப்போயுள்ள யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் கற்றல் செயற்பாடுகளை மீளவும் ஆரம்பிக்க அனைவரும் பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

அதிலும் பல்கலைக்கழக மாணவர்களின் பாதுகாப்பு விடயத்தில் படைத்தரப்பில் உத்தரவாதம் இங்கு தேவையானதாகவுள்ளது. இது விடயத்தில் படைத் தரப்பினர் பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டும்.

இவற்றுக்கு மேலாக எமது தமிழ் மாணவர்கள் பட்டப்படிப்பை மேற்கொள்வதற்கு பல்கலைக்கழகத்தை அண்மித்த சூழலில் உள்ள பொதுமக்கள் தமது பூரண ஒத்துழைப்பையும் உதவிகளையும் வழங்குவது காலத்தால் செய்யும் நன்றியாகும்.

# தமிழர்கள் இன்று கடத்தப்படுகிறார்கள் நாளை சிங்களவர்கள் கடத்தப்படுவார்கள்!

## ஐ.தே.க.எம்.பி. லக்ஷ்மன் கிரியெல்ல கூறுகிறார்

(கொழும்பு)

அரசாங்கத்திலிருந்து சில பாராளுமன்ற உறுப்பினர்கள் எமது கட்சியுடன் இணையவுள்ளனர். இதற்கான பேச்சுவார்த்தை தற்போது இடம்பெற்று வருகின்றது. விடுதலைப்புலிகள் பயங்கரவாத நடவடிக்கையில் ஈடுபடுகின்றனர் என்பதற்காக அரசாங்கமும் பயங்கரவாத நடவடிக்கையில் ஈடுபடுவது தவறாகும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷமன் கிரியெல்ல தெரிவித்தார்.

இன்று தமிழர்கள் கடத்தப்பட்டு வருகின்றனர்.நாளை சிங்களவர்களும் கடத்தப்படும் நிலை ஏற்படும். கடத்தல்களில் இலங்கை உலக சாதனை படைத்துள்ளது என்றும் அவர் கூறினார் எதிர்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையில் அவர் மேற்கண்டவாறு கூறினார் அவர் அங்கு மேலும் கூறியதாவது;

அரசாங்கத்தில் இருந்து சில எம்.பிக்கள் எமது கட்சியுடன் இணைந்து கொள்ள விருப்பம் தெரிவித்துள்ளனர். இருப்பினும் இவர்களுடன் எவ்வாறு இணைந்து செயற்படுவது என்ற பேச்சுவார்த்தை தற்போது இடம்பெற்று வருகிறது. எதிர்காலத்தில் அரசியலில் பாரிய மாற்றங்கள் இடம்பெறலாம். ஐ.தே.க.வுடன் இணைய பலர் விருப்பம் தெரிவித்துள்ளனர்.

அரசாங்கத்தின் எம்.பிக்கள் எமது கட்சியுடன் இணைந்து கொண்ட பிறகு நீதிமன்றம் என்ன தீர்ப்பு வழங்கப்போகிறது என்று பார்ப்பதற்கு ஆவலாக இருக்கின்றோம். காரணம் அரசாங்கத்திற்கு எமது கட்சி உறுப்பினர்கள் சென்றவுடன் நீதிமன்றம் குறிப்பிட்ட எம்.பிக்களின் எம்.பி.பதவி பாதுகாக்கப்படும் வகையில் தீர்ப்பளிக்கின்றது. ஆனால் அரசியல் அமைப்பு அதற்கு எதிர்மாறான வரைவிலக்கணத்தைக் கொடுக்கிறது.

எம்.பி.ஒருவர் கட்சி மாறினால் அவரது எம்.பி. பதவி பறிபோய்விடும் என்பது அரசியல் அமைப்பு விதியாகும். எமது நாடு இன்று சர்வதேசத்தின் மத்தியில் கேள்விக்குறியாகி உள்ளது. இலங்கை வரலாற்றில் முதன்முறையாக இலங்கைக்கு எதிராக ஏழு தீர்மானங்கள் ஐக்கிய நாடுகள் சபையில் நிறைவேற்றப்படவுள்ளன.

இது எமது நாட்டிற்கு பாரிய பலவீனமாகும். முன்னாள் வெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் எமது நாடு தொடர்பாக வெளிநாட்டில் உருவாக்கி வைத்திருந்த நன்மதிப்பு தற்போது இல்லை. அதனால்தான் முன்னாள் வெளியுறவு அமைச்சர் மங்கள சமரவீர எமது நாட்டின் சார்பாக வெளிநாடுகளுக்கு விஜயங்களை மேற்கொள்ளும் போது சிரமங்களை எதிர்கொண்டார் . வெளிநாடுகள் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக மங்கள சமரவீரவிடம் கேள்வி எழுப்பியுள்ளன.

தற்போது எமது நாட்டின் வெளியுறவுக் கொள்கைக்கு என்ன நடந்துள்ளது என்று தெரியவில்லை. வெளிவிவகார அமைச்சரின் முகம் மாற்றப்பட்டது என்பதற்காக எமது நாடு இழந்த சர்வதேச நன்மதிப்பை மீண்டும் பெற முடியுமா?

இலங்கை ஒரு மிலேச்ச நாடாக இன்று சர்வதேச மட்டத்தில் கருதப்படுகின்றது.கடத்தல்களில் இலங்கை உலக சாதனை படைத்துள்ளது என்றார்.

அதேவேளை வெளிநாடுகளில் புலிகளை விமர்சித்துப் பேசுவதில் அர்த்தமில்லை. காரணம் புலிகள் வடக்கில் தேர்தலை பகிஷ்கரித்தமையின் காரணமாகவே மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதி ஆனார்.எனவே ஜனாதிபதி ஒவ்வொரு நாளும் காலையில் புலிகளுக்கு பூ வைத்து கும்பிட வேண்டும் என்றார். (எ-1)

# கடத்தல்கள் குறித்து தெரிவித்த கருத்தினை அமைச்சர் ஹெகலிய மீளப்பெற வேண்டும்

## மனோகணேசன் எம்.பி. தெரிவிப்பு

(கொழும்பு)

விடுதலைப்புலிகளினால் உருவாக்கப்பட்ட குழுவே தமது உறவினர்கள் கடத்தப்பட்டதாகக் கூறி தொலைக்காட்சியில் அழுவதாக அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்துள்ள கருத்து ஏற்றுக் கொள்ளப்பட முடியாதது. இக் கருத்தினை அவர் மீளப் பெற வேண்டும் என்று மே.ம.முவின் தலைவரும் மக்கள் கண்காணிப்புக் குழுவின் ஏற்பாட்டாளரும் கொழும்பு மாவட்ட எம்.பியுமான மனோகணேசன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டுள்ள மனித உரிமைகள் ஆணைக்குழு வட.-கிழக்கிலே கடத்தப்பட்டு காணாமல் போனவர்களதும், படுகொலை செய்யப்பட்டவர்களினதும் பட்டியல்களை வெளியிட்டுள்ளது. இன்னும் பல்வேறு மனித உரிமை அமைப்புக்களும் விபரங்களை ஊர்ஜிதப்படுத்தியுள்ளன.

அதேபோல் கொழும்பிலும் தெற்கிலும் நடைபெற்றுள்ள சம்பவங்களை எமது மக்கள் கண்காணிப்புக் குழு பட்டியலிட்டுள்ளது. இவற்றை கொழும்பிலிருந்து செயற்படும் இராஜ தந்திரிகளும் ஏற்றுக் கொண்டுள்ளார்.

அதேபோல் சர்வதேச மன்னிப்பு சபை, ஆசிய மனித உரிமைகள் குழு, மனித உரிமை அவதான அமைப்பான (ஹியுமன் ரைட்ஸ் வொட்ச்) ஆகிய அமைப்புகளுடன் ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவும் இலங்கையிலே கடத்தப்பட்டு காணாமல் போனவர்கள்,படுகொலை செய்யப்பட்டவர்கள் பற்றிப் பாரிய அக்கறைகளுடன் செயற்பட தொடங்கியுள்ளன.

இவ்வளவு நடந்த பிறகும் அரசாங்கத்தின் பேச்சாளரும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் நலன்புரி அமைச்சருமான ஹெகலிய ரம்புக்வெல, இச்சம்பவங்களுக்கு புலி முத்திரை குத்தி, தங்களது உறவுகளை இழந்து தவிக்கும் குடும்பத்தவர்களது அழுகை ஓலங்களை தொலைக்காட்சி நாடகங்களாக வர்ணித்து கொச்சைப்படுத்துவதை ஏற்றுக் கொள்ள முடியாது.

அரசாங்கத்திலே இருந்தபடி கடத்தலையும் கைதுகளையும் எதிர்த்து அறிக்கை அரசியல் நடத்தி வரும் மலையக தமிழ் அமைச்சர்கள் ஹெகலிய ரம்புக்வெலவின் மனிதாபிமானமற்ற கருத்திற்கு என்ன பதில் கூறுகின்றார்கள் என்ற கேள்வியை தமிழ் மக்கள் எழுப்புகின்றார்கள்.

புலிகளின் ஆதரவாளர்கள், அங்கத்தவர்கள் என்ற அடிப்படையில் எவரையும் கைது செய்வதையும்கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு தடுத்து வைக்கப்படுவதையும் நாம் எதிர்க்கவில்லை.

ஆனால் சட்டத்திற்கு புறம்பாக அடையாளம் தெரியாத நபர்களால் கடத்தப்பட்டு காணாமல் போவதை நாம் எதிர்க்கின்றோம். வர்த்தகர்கள் கடத்தப்பட்டு அவர்களிடமிருந்து கப்பம் அறிவிடப்படுவதை நாம் எதிர்க்கின்றோம் என்றுள்ளது. (ச)

# கல்விமாணி கற்கை நெறி இரண்டாம் வருட பரீட்சை

(கொழும்பு)

தேசிய கல்வி நிறுவகத்தால் நடத்தப்படும் கல்விமாணிக் கற்கை நெறியின் இரண்டாம் வருட இறுதிப் பரீட்சைகள் இன்றும் நாளையும் மற்றும் 24ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளதாக தேசிய கல்வி நிறுவகத்தின் பரீட்சைகள் பிரிவு அறிவித்துள்ளது.

சிங்கள மொழிமூலம் இருபத்தொரு நிலையங்களிலும் தமிழ் மொழி மூலம் பன்னிரெண்டு நிலையங்களிலும் இக் கற்கைநெறி நடத்தப்பட்டு வருகின்றது. (ச)

# பெற்றோல் விநியோகத்தில் மோசடி பிராந்திய முகாமையாளர் நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரப் பகுதியிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் பெற்றோல் வழங்குவதில் ஏற்பட்ட மோசடி பெற்றோலியக் கூட்டுஸ்தாபன அதிகாரிகளால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அரச அதிபரினால் நிர்ணயிக்கப்பட்ட விநியோக அளவுக்கு மேலாக பெற்றோல் விநியோகிப்பது குறித்துக் கிடைத்த தகவல்களின் அடிப்படையிலேயே இந் நடவடிக்கை எடுக்கப்பட்டதாக பெற்றோலியக் கூட்டுஸ்தாபனப் பிராந்திய முகாமையாளர் தெரிவித்தார்.

இம் மோசடி தொடர்பாக பொதுமக்களிடமிருந்து கிடைத்த தகவலையடுத்து கடந்த 14 ஆம் திகதி குறித்த எரிபொருள் நிரப்பு நிலையத்தில் பெற்றோல் விநியோகிக்கப்படும் போது நேரில் சென்ற பிராந்திய முகாமையாளர் மோசடி தொடர்பாக சம்பந்தப்பட்டவர்களை கையும்மெய்யுமாகப் பிடித்துள்ளார்.

எனினும் அவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கு பொதுமக்கள் மத்தியிலிருந்து தமக்கு ஆதரவு கிடைக்கவில்லை என பெற்றோலியக் கூட்டுஸ்தாபனத்தின் பிராந்திய முகாமையாளர் கவலை தெரிவித்தார். (எ-1)

## பிரிட்டிஷ் பாடகர் இலங்கை வருகை

புகழ் பெற்ற பிரிட்டிஷ் பாடகர் கிளிங்ரிச்சர்ட் இலங்கை வரவுள்ளார். ஆசிய நாடுகளுக்கான சுற்றுப் பயணத்தை மேற்கொண்டுள்ள அவர் இறுதிக் கட்டமாக இலங்கை வரவுள்ளார். இவரின் இசை நிகழ்ச்சி ஒன்றும் கொழும்பில் நடைபெறவுள்ளது. (ச)

## மட்டக்களப்பில் ஆயுதங்கள் மீட்பு

மட்டக்களப்பு ஈச்சிலம்பற்றில் நேற்று வெள்ளி காலை 10 மணியளவில் இராணுவத்தினர் பெருமளவில் ஆயுதங்களையும் வெடிபொருட்களையும் மீட்டுள்ளதாக தேசிய பாதுகாப்பு ஊடக மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

45டி 5சி ரக மற்றும் இரு டி - 81 ரக ஆயுத துப்பாக்கிகளும் 210 மகசின்களும் இராணுவத்தினரால் மீட்கப்பட்டுள்ளது. இதனையடுத்து இராணுவத்தினர் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாக தேசிய பாதுகாப்பு ஊடக மத்திய நிலையம் மேலும் தெரிவித்துள்ளது. (ச)



காலியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற யானைகள் விளையாடும் போலோ போட்டியின் போது யானை ஒன்று மதம் கொண்டு அதிலிருந்த அமெரிக்கரை வீழ்த்திவிட்டு வாகனம் ஒன்றை தூக்க முற்படுவதைப் படத்தில் காணலாம்.

## 18 தமிழ் மக்கள் கொழும்பில் விடுதலை

(கொழும்பு)

கொழும்பு பிரதம நீதிபதி 18 தமிழர்களையும்விடுதலை செய்யுமாறு நேற்று முன்தினம் உத்தரவிட்டுள்ளார். இவர்கள் கடந்த 9ம் திகதி போறல மீறிகன பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கைகளின் போது கைது செய்யப்பட்டவர்கள் எனவும் இவர்களுக்கும் பயங்கரவாதத்திற்கும் எதுவித தொடர்பும் இருப்பதற்கான சாட்சியங்கள் இல்லை எனவும் நீதிபதி தெரிவித்துள்ளார்.

இராணுவம் மற்றும் பொலிஸார் பொது மக்களை சந்தேகத்தின் பேரில் கைது செய்து பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் தடுத்து வைத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச)

## கண்டியில் 14 பேர் கைது

(கண்டி)

கண்டியில் 14பேர் கைது செய்யப்பட்டு விசாரணைகளுக்கென அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

கண்டி குட்செற் பயணிகள் பேருந்தில் குண்டு வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸாருக்கு தகவல் அளிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து இராணுவத்தினரும் பொலிஸாரும் இணைந்து விசேட தேடுதலை மேற்கொண்டனர். எனினும் குண்டு எதுவும் கண்டு பிடிக்கப்படவில்லை.

இதன்போது பஸ்ஸில் வந்தவர்கள் தடுத்து விசாரிக்கப்பட்ட பின் விடுவிக்கப்பட்டனர். எனினும் 14பேர் தமது ஆவணங்களை காட்டத்தவறியமையால் விசாரணைக்கென அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர். (ச)

## போர் நிறுத்த உடன்படிக்கையினை அரசு உடன் ரத்துச் செய்ய வேண்டும்

### ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ச கோரிக்கை



(கொழும்பு)

இலங்கையின் உள்விவகாரங்களில் வெளிநாடுகள் தலையிட இடமளித்ததுடன் புலிகளுக்கு இராஜதந்திர அந்தஸ்தை வழங்கிய போர் நிறுத்த உடன்படிக்கையை அரசாங்கம் உடனடியாக ரத்து செய்ய வேண்டும். இதனை வலியுறுத்தி எதிர்வரும் 22 ஆம்திகதி கொழும்பு ஹைட் பார்க்கில் மாபெரும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டப்போராட்டமொன்றை மேற்கொள்வதாக ஜே.வி.பியின் பிரசார செயலாளர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் தேசிய அமைப்புக்களின் ஒன்றியம் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது, இலங்கையின் உள்விவகாரங்களில் வெளிநாடுகள் தலையிடுவதற்கு போர் நிறுத்த உடன்படிக்கையே இடமளித்தது. அத்துடன் விடுதலைப்புலிகளுக்கு இராஜதந்திர அந்தஸ்தையும் இந்த தேசத்துரோக உடன்படிக்கை பெற்றுக் கொடுத்தது. அந்த வகையில் இந்த தேசத் துரோக உடன்படிக்கையை அரசாங்கம் உடனடியாக ரத்துச் செய்ய வேண்டும். இந்த உடன்படிக்கையை ரத்துச் செய்ய வலியுறுத்தி ஆர்ப்பாட்டங்களை நடத்தவுள்ளோம் என்றார். (ச)

## எரியூட்டப்பட்ட நிலையில் வவுனியாவில் சடலம் மீட்பு

வவுனியா பூந்தோட்டம் பகுதியில் எரியூட்டப்பட்ட நிலையில் சடலமொன்றினைப் பொலிஸார் நேற்று மீட்டுள்ளனர். இந்தச் சடலம் இன்னும் அடையாளம் காணப்படவில்லை.

நேற்றுக் காலை பொலிஸாருக்குக்கிடைத்த தகவல் ஒன்றினையடுத்து பூந்தோட்டம் காத்தார் சின்னக்குளம் பகுதியிலிருந்து இந்தச் சடலம் மீட்கப்பட்டுள்ளது. (ச)

## கடும் வெப்பம் காரணமாக இடம்பெயர்ந்த மக்கள் அவதி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் தற்போது நிலவிவரும் கடுமையான வெப்பம் காரணமாக வாகரையிலிருந்து இடம்பெயர்ந்து அகதி முகாம்களில் கூடாரங்களில் தங்கியுள்ள மக்கள் பெரும் கஷ்டங்களை எதிர் கொண்டு வருகின்றனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் வாழைச்சேனை ,செங்கலடி, கிரான் , மண்முனை வடக்கு ,ஆரையம்பதி ,களுவாஞ்சிக்குடி ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளில் 49 அகதி முகாம்களில் சுமார் 70 ஆயிரம் பேர் தங்கியுள்ளனர்.

தற்போது உள்ள கடுமையான வெயில் காரணமாக இம்மாவட்டத்தில் கூடாரங்களுள் தங்கியிருப்போர் அதனுள் இருக்க முடியாமல் மரநிழல்களிலும் வெளி இடங்களிலும் பொழுதைக் கழிக்கின்றனர். கடுமையான வெப்பம் காரணமாக தடிமல், சளிச்சுரம் ,காய்ச்சல், தலைவலி , இருமல் உட்பட பல்வேறு நோய்களுக்கும் ஆளாகியுள்ளனர்.

இதன் காரணமாக தற்காலிக கூடாரங்களை மாற்றி ஓலைகளிலான குடிசைகளையாவது அமைத்துத் தருமாறு இடம்பெயர்ந்த மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச)

## ஜனாதிபதி ஆணை இறுதி அறிக்கை அடுத்த மாதம் சமர்ப்பிப்பு

(கொழும்பு)

ஆட்கடத்தல்,காணாமல் போதல் மற்றும் சிவிலியன் படுகொலை தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்வதற்காக ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட ஆணைக்குழு அடுத்த மாதம் தனது இறுதி அறிக்கையை சமர்ப்பிக்குமென அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த செப்ரெம்பர் மாதம் நியமிக்கப்பட்ட இந்த ஆணைக்குழு தனது இடைக்கால அறிக்கையை ஏற்கனவே ஜனாதிபதியிடம் கையளித்துள்ளது.

ஓய்வு பெற்ற மேல் நீதிமன்ற நீதிபதி மகாநாம திலகரத்ன தலைமையிலான இவ் ஆணைக்குழுவுக்கு 348 முறைப்பாடுகள் சமர்பிக்கப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு ,திருகோணமலை மற்றும் கொழும்பு மாவட்டங்களில் இருந்து கிடைத்த முறைப்பாடுகள் விசாரிக்கப்பட்டுள்ளன. இந்த ஆணைக்குழுவின் அங்கத்தவர்கள் விரைவில் யாழ்ப்பாணம் சென்று யாழ்.மாவட்டத்திற்கான முறைப்பாடுகளையும் விசாரிக்கவுள்ளனர் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## முஸ்லிம் காங்கிரஸின் மத்திய குழு அங்குரார்ப்பணம்

அம்பாறை மாவட்டத்திற்கான அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸின் மத்திய குழுவொன்று தற்போது அமைக்கப்பட்டிருக்கின்றது. இதற்கான அங்குரார்ப்பணக் கூட்டம் அண்மையில் அதன் கல்முனைக்காரியாலயத்தில்இடம்பெற்றது.

அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸின் முக்கியஸ்தரும் நெடுஞ்சாலைகள் அமைச்சின்இணைப்பாளருமான ஏ.எம்.ஏ.லத்தீப் தலைமையில் நடைபெற்ற மேற்படி கூட்டத்தில் அம்பாறை மாவட்ட மத்திய குழு நிர்வாகிகளுக்கான தெரிவுகள் இடம்பெற்றதோடு கட்சியின் எதிர்கால நடவடிக்கைகள் குறித்தும் ஆராயப்பட்டது.

மாவட்ட மத்திய குழுவின் தலைவராக ஏ.மன்சூரும் இணைச்செயலாளர்களாக ஏ.எம்.ஏ. ரஹ்மான், எம்.தி.ரம்ஸின் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர். (ச)

## மனித உரிமைப்...

ஆக்கிரமிப்புக்குள்ளாகியுள்ள எமது தாயகப் பகுதியின் மனித உரிமை மற்றும் மனிதாபிமான பிரச்சினைகள் அனைத்துலக ஊடகங்களுக்கும் மனிதாபிமான உதவி நிறுவனங்களுக்கும் தெரிவிப்பதற்கு வசதியாகவே எமது தலைமை இந்த நியமனத்தை வழங்கியுள்ளது' என்றார். (ச-5)

## பிரித்தானிய...

கிழக்கு மாகாணத்திற்கு விஜயம் செய்து சுனாமி பேரலையினால் பாதிக்கப்பட்ட இடங்களை பார்வையிட்டு பாதிக்கப்பட்ட மக்களுடனும் கலந்துரையாடிய அமைச்சர் கிம் ஹெவல்ஸ் சுனாமியால் மோசமாக பாதிக்கப்பட்ட மட்டக்களப்பிற்கு விஜயம் செய்யவில்லை என கூட்டமைப்பு எம்.பிக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (எ-1)

## முன்னாள்...

கிளிநொச்சியில் தாக்குதல்களை அரசு ஏன் நடத்தவில்லை என சிறிபதி சூரியாராட்சி எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே ரம்புக்வெல இக் கருத்துக்களைத் தெரிவித்துள்ளார். (ச)

## நாட்டுக்கு மிக முக்கியமான...

பிக்குகள் முன்னணியின் தலைவர் குறிப்பிட்டார்.

போர்நிறுத்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட முன்னர் விடுதலைப்புலிகள் என்ற அமைப்புப் பற்றியோ அல்லது அவர்கள் நடத்திவரும் தனிநிர்வாகமோ அல்லது கட்டுப்பாடற்ற பகுதி போன்ற விடயங்கள் பற்றியோ சர்வதேச நாடுகளுக்குத் தெரியாதிருந்தது எனச் சுட்டிக்காட்டிய தம்பர அமில தேரர், போர் நிறுத்த உடன்படிக்கைகைச்சாத்தி டப்பட்ட பின்னர் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகள் மற்றும் அவர்களின் நிர்வாகம் குறித்து அறிந்து கொண்ட சர்வதேச சமூகம் அதனை ஏற்றுக்கொண்டிருப்பதாகக் குற்றஞ்சாட்டினார்.

இவ்வாறான விடயங்களை ஏற்றுக் கொண்ட சர்வதேச சமூகம் விடுதலைப் புலிகளின் தனிநாட்டுக் கோரிக்கையை ஏற்றுக் கொள்வதற்கு நீண்ட நேரம் செல்லாது என்றார் அவர்.

இதனால் போர் நிறுத்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு 5 ஆண்டுகள் பூர்த்தியடைந்தவுடன் ஒரு நிமிடமும் தாமதிக்காமல் போர்நிறுத்த உடன்படிக்கை கிழித் தெறியப்பட வேண்டும் எனவும் அவர் நேற்றைய ஊடகவியலாளர் மாநாட்டில் குறிப்பிட்டார்.

அத்துடன் போர்நிறுத்த உடன்படிக்கை கிழித்தெறியப்பட வேண்டுமெனக் கோரி நடத்தப்பட்டுவரும் சுழற்சி முறையான உண்ணாவிரதப் போராட்டம் நேற்று 5வது நாளாகவும் தொடர்ந்தும் நடைபெற்று வருகின்றது. (ச-5)

## சிலாபத்துறை...

அவர் தெரிவித்தார்.

இதனையடுத்து கடற்படையினர் மேற்கொண்ட பதில் தாக்குதலில் இரு படகுகளும் மூழ்கடிக்கப்பட்டுள்ளன. அதிலிருந்த 4பேரும் உயிரிழந்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

இதனையடுத்து கடற்படையினர் குறிப்பிட்ட இரு படகுகளும் மூழ்கடிக்கப்பட்ட இடத்தில் தேடுதல் நடத்திய போது 28 பொதிகளில் 10 லட்சத்திற்கும் அதிகமான உருக்குவாள் வயரிங் சன்னங்கள் மற்றும் சில ஆயுதங்களும் மீட்கப்பட்டதாக அவர் கூறினார்.

இதேவேளை கடற்படையினரால்மூழ்கடிக்கப்பட்ட இரு படகுகளும் தங்களுடையவையல்ல என விடுதலைப்புலிகள் தெரிவித்துள்ளனர். (ச)

## மங்களவுடன்...

உள்ள பிரச்சினைகளைத் தீர்க்க முயன்று வருகின்றோம் எனத் தெரிவித்துள்ளார்.

எப்போது இரு முன்னாள் அமைச்சர்களையும் சந்திக்கப் போகின்றீர்கள் எனக் கேட்கப்பட்ட கேள்விக்கு 'அவர்கள் தற்போது நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில்நடைபெறும் ஊடகவியலாளர் மாநாட்டில் உள்ளனர். அதன் பின்னர் சந்திக்க முடியும்' என நம்புவதாகத் தெரிவித்தார்.

மூன்று அமைச்சர்களும் ஏன் முன்னெச்சரிக்கை செய்யப்படாமல் உடனடியாக நீக்கப்பட்டார்கள் எனக் கேட்கப்பட்ட போது புன்முறுவலை உதித்த டி.எம்.ஜெயரட்ண அது தான் அரசியல் என தெரிவித்தார். (ச-5)

இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ.ஸ்தாபனத்தாரால் இல.03, இரண்டாம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 17.02.2007 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.